





# அருள்மிகு குண்டியம்மன் புகழ்மாலை

இப்புகழ் மாலையை எனது பெற்றோர்களுக்கு
அர்ப்பணிக்கின்றேன்

**சிவசக்தி கோபிநாத்**

உதவி இயக்குநர் (ஓய்வு), ஊரக வளர்ச்சித்துறை,
திருவள்ளூர்
கைபேசி : 9940080776

அச்சும் அமைப்பும் :
சுந்தரா பதிப்பகம்
538, தங்கம் நகர், கீழ்நல்லாத்தூர்,
திருவள்ளூர்-602 002. தொலைபேசி : 98405 38876
E-mail : sundarapathipagam@gmail.com

வெளியீடு : ஜனவரி 2014

பொருளடக்கம்

பக்கம்

அருள்மிகு குண்டியம்மனின்

காயத்ரி ஸ்லோகம் .............. 3

'' வரலாறு மற்றும் மகிமை ..... 5

'' போற்றிகள் ........................ 16

'' கவசம் ................................ 21

'' பக்தி பாடல்கள் ................. 24

'' ஊஞ்சல் சேவை பாடல் .... 28

இந்நூலை அச்சிட்டு இலவசமாக வழங்கியவர் :

**சிவசக்தி கோபிநாத்**



ஓம் மஹாகணாதிபதயே நம:

அருள்மிகு குண்டியம்மன் துணை

## அருள்மிகு குண்டியம்மன் காயத்ரி

ஓம் சாமுண்டைக வித்மஹே !
சர்வ சக்தைக தீமஹீ !
தன்னோ குண்டி ப்ரஜோதயாத் !

## அம்மன் ஸ்லோகங்கள்

ஸ்யாமா காசன சந்திரிகா த்ரிபுவனே
புண்யாத்மானா மானனே
சீமா சூன்ய கவித்வ வர்ஷ ஜெனனி
யாகாபி காதம்பினி
மாராராதி மனோ விமோஹன
விதொளகா சித்தம் நமஹ:
சுந்தரி காமாக்ஷாஹ:
கருணா கடாக்ஷ லஹரீ
காமயமே கல்பதாம்
தேவி தயாபரி குண்டலீஸ்வரீ:



வேதாந்த ப்ரதிபாத்யமானவிபவாம்
வித்வன் மனோ ரஞ்சனீம்
ஸ்ரீசக்ராங்கித ரத்னபீட நிலையாம்
ஸ்ரீராஜ ராஜேஸ்வரீம்

❖ ❖ ❖

சர்வ மங்கள மாங்கல்யே
சிவே சர்வார்த்த சாதகே
சரண்யே த்ரியம்பகே தேவீ
நாராயணீ நமஸ்துதே!

❖ ❖ ❖



## அருள்மிகு குண்டியம்மன் கோவில் ஸ்தல வரலாறு மற்றும் மகிமை

பல நூற்றாண்டுகளுக்கு முன் குசஸ்தலை ஆற்றின் கரையில் அமைந்துள்ள 'புண்ணியம்' என்ற கிராமத்தில் ஒரு அதிசயம் நடந்தது. அது என்னவென்றால் அந்த கிராமத்தைச் சேர்ந்த ஒரு உழவர் தனது நிலத்திற்கு வேண்டிய தழைச் சத்து எடுத்துவர காட்டிற்குச் சென்று தன்னால் இயன்ற அளவில் மரத்தின் தழைகளை வெட்டி சுமையாக கட்டிக் கொண்டு தனது வயலுக்கு எடுத்து வந்து கொண்டிருக்க, அவர் கொண்டு வரும் தழைச்சுமை அளவு கொஞ்சம் கொஞ்சமாக அதிகரித்துக் கொண்டு வந்தது.

அவர் அச்சுமையை வழியில் இறக்கி விடாமல் மிகவும் சிரமப்பட்டு தனது வயலுக்கு வந்ததும் அச்சுமையை இறக்கினார். அவர் மீது அச்சமயம் ஆவேசம் வந்தது. அருகாமையில் இருந்த உழவர்கள் அருகில் வந்து பார்த்தனர். அவரது அருள் வாக்கு இவ்வாறு :

''அடேய்! நான் சாமுண்டி இந்த தழைச் சுமையில் உருவெடுத்து லிங்க வடிவத்தில்

வந்துள்ளேன். அதை இவ்விடத்திலேயே பிரதிஷ்டை செய்து குண்டியம்மன் என்ற நாமத்தில் வழிபடு வீர்களாக!''

அதன்பின் ஆவேசம் தெளிந்ததும் அந்த உழவர் என்ன நடந்தது என்று அறியாமல் மற்றவர்களைக் கேட்டறிந்து தனது தலைச் சுமையை பிரித்துப் பார்க்க, அதில் லிங்க வடிவில் ஒரு சிலை இருந்தது. அருள் வாக்கின்படி அந்த வடிவத்தை அதே இடத்தில் ஊர் பெரியோர்களின் முன்னிலையில் பிரதிஷ்டை செய்து, பூஜைகள் செய்து வந்தனர்.

அருள் வாக்கின்படி புதன் கிழமைகளில் அவர்களால் முடிந்த அளவிற்கு அபிஷேகம், ஆராதனை செய்து வந்தனர். அந்தச் சிலையை சுற்றிலும் கற்பாறைகளை நிறுத்தி, கதவு தாளிட்டு பராமரித்து வந்தனர். ஊர் மக்களிடம் அளவிலா ஒற்றுமையுடன் எல்லோரும் பங்கேற்று பூஜைகளை நடத்தி வந்தனர்.

அம்மன் அருள் வாக்கு பலிக்க ஆரம்பித்தது. அம்மனின் புகழ் சுற்றுப்புறத்தில் மிகவும் பிரபலமாகி விட்டது. அப்போது 'புண்ணியம்' கிராமம் கார்வேட்டி நகர சமஸ்தான இராஜாவின் கட்டுப்பாட்டில் இருந்தமையால் ஊர் பெரியோர்கள்



இராஜாவிடம் சென்று நடந்த சவிஸ்தாரத்தை உரைத்தனர்.

அப்போது, இராஜா ஊர் மக்கள் அனைவரையும் ஈடுபடுத்தும் வகையில் சில நபர்களை நியமித்து முறைப்படுத்தி அவர்கள் மூலம் பூஜைகளை நடத்தவும் ஊர் நடுவில் ஒரு கோவில் நிறுவி, அதில் பஞ்சலோகத்தில் ஸ்ரீகுண்டியம்மனின் அற்புத வடிவிலான ஒரு சிலையை பிரதிஷ்டை செய்து பூஜைகளை செய்து வர ஏற்பாடு செய்தார். ஆகம சாஸ்திரப்படி அங்கு பூஜைகள் அர்ச்சகர்களால் நடத்தப்பட்டு வந்தது.

வயலில் உள்ள மூலவருக்கு பூஜாரி மூலம் வழிபாடுகள், அபிஷேகம், அலங்காரம், வர்ணிப்பு, திருப்பாவாடை நடத்தப்பட்டு வந்தது. அம்மன் அருள் எட்டுத் திக்கும் பரவியது.

இப்படியாக இருக்கையில் ஒரு மந்திரவாதி கொடியவன், அம்மன் சிறப்பையறிந்து அம்மனை தன் வசப்படுத்திக்கொள்ள வேண்டுமென்ற கொடிய நோக்கத்துடன் பல முறைகளைக் கையாண்டு இறுதியாக ஒரு அமாவாசையன்று நடு விசையில் வயலிலுள்ள மூலவர் கோவிலைத் திறந்து அம்மன் அருளை தன் வசப்படுத்தும் கெட்ட



எண்ணத்துடன் பல துஷ்டத்தனமான முறைகளில் ஈடுபட்டான்.

அதன் விளைவு என்னவாயிற்று தெரியுமா? அம்மன் எதிரே நிறுவப்பட்டிருந்த திரிசூலத்தால் தாக்கப்பட்டு அவன் கோவிலுக்கு மிக தூரத்தில் வீசி எறியப்பட்டான். நெஞ்சுக்குழியில் சூலத்தை தாங்கியவாறு இரத்த வெள்ளத்தில் கிடந்தான். இதைக் கண்ட அவனது சீடன் ஓடிவிட்டான்.

மறு நாள் வயலுக்கு வந்தவர்கள் இதைக் கண்டு பயந்து ஊருக்குள் சென்று ஊர் மணியம், கர்ணம் மற்றும் பெரியோர்களை அழைத்து வந்தனர். அந்த நேரத்தில் ஒருவர் மீது அம்மன் ஆவேசம் வந்து மேற்கூறியவாறு நடந்ததை மக்களுக்குத் தெரிவித்தது. அந்த மந்திரவாதிக்கு உயிர் இருந்தது. ஆனால் பேச முடியவில்லை. அவரது நெஞ்சுக்குழியில் இருந்த சூலத்தை ஆவேசம் வந்தவர் எடுத்து, அம்மனது விபூதியை வைத்தார். அம்மனது தீர்த்தம் வழங்கப்பட்டது. அந்த மந்திரவாதி தனது தவறை உணர்ந்து திருந்தி அம்மன் கோவிலிலேயே தனது காலத்தைக் கழித்தான் என்பது வரலாறு.

மற்றொரு அதிசயம் என்னவென்றால், 'புண்ணியம்' கிராமத்தில் விவசாயத்திற்கு நீர்



ஆதாரம் ஏற்படுத்தியதே அருள்மிகு குண்டியம்மன் தான். ஒரு முறை நீர் வெட்டியை தன்னைத் தொடர்ந்து வரும்படி ஆணையிட அவர் அம்மனை பின்தொடர அம்மன் குறிப்பிட்ட இடத்தில் மண் வெட்டியால் மண் தோண்டி எடுக்க அங்கு நீர் ஊற்று ஏற்பட்டு ஊரணியாக உருவெடுத்து பின்பு ஊர் மக்கள் அனைவரும் அதனைக் குடிமராமத்து செய்து கசம் கால்வாயாக ஏற்படுத்தி, நஞ்சை நிலங் களுக்குப் பாசனமாக ஏற்படுத்தினார்கள் என்பது ஒரு பெரும் சிறப்பு.

இதுபோன்ற அதிசய நிகழ்வுகள் தனிப்பட்ட நபர்களுக்கும் வாழ்க்கையில் ஏற்பட்டுள்ளது. அதாவது, குழந்தை பாக்கியம் பெறுதல், பேய், பிசாசுகள் போன்ற கெட்ட பீடைகள் நீங்குதல், வியாபார விருத்தி போன்ற பல நிகழ்வுகள் நடந்துள்ளது.

அந்த நாளில் ஊர் நடுவில் கட்டிய கோவில் பழுதடைந்தமையால் ஆன்மீகப் பெரியோர் களாலும், நல்லுள்ளம் படைத்தவர்களாலும் பல திருப்பணிகள், அதாவது கோவில் மதில் சுவர்கள், கோபுரம், மண்டபங்கள் மற்றும் கோவில் உள் பிரகாரங்கள் அமைக்கப்பட்டு பூஜைகள் மிக சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது. கடந்த

20 ஆண்டுகளாக நித்தியப் பூஜைகளும் மிக சிறப்பான முறையில் நடத்தப்பட்டு வருகிறது. மேலும் வயலிலுள்ள உற்சவ மூர்த்திக்கு கோயில், கோபுரம், பூந்தோட்டம், சுற்று பிரகாரம் மற்றும் பராமரிப்புப் பணிகள் ஆன்மிக பெரியோர்களால் மிக சிறப்பாக செய்யப்பட்டு குடமுழுக்கும் நடத்தப்பட்டது. தற்போது கோவில்கள் மிக சிறப்பாக பராமரிக்கப்பட்டு வருகிறது.

அருள்மிகு ஸ்ரீ குண்டியம்மனுக்கு ஆவணி மாதம் சிறப்பு. அந்த ஆவணி மாதக் கடைசி புதன் கிழமையன்று தேர் திருவிழா நடத்தும் வகையில் அதற்கு முன் பதினைந்து நாட்களுக்கு முன்னதாக வரும் புதன் கிழமையன்று இரவு அம்மனுக்கு திருக்காப்பு அணிவித்து நடுவிசையில் பறைச்சாற்றி விடுவார்கள். அதுமுதல் ஊரில் அனைவரும் விரதம் அனுஷ்டிப்பார்கள். ஊர் மக்கள் வெளி ஊர்களுக்குச் சென்று இரவு தங்க மாட்டார்கள். வெளி ஊர்களிலிருந்து வருபவர்களுக்கும் இது பொருந்தும். அன்று முதல் காலையிலும் மாலையிலும் அம்மனுக்கு அபிஷேகம், அலங்காரம் மற்றும் அம்மனது துதிப்பாடி வர்ணிப்பும் நடைபெறும்.

அடுத்து வரும் புதன்கிழமை இரவு முதல் உற்சவ மூர்த்திக்கும் அபிஷேகம், அலங்காரம்



மதியத்திலும் இரவிலும் வீதி உலா கோலாகலமாக நடைபெறும். கடைசி புதன் அன்று அனைவரும் பால் காவடிகள் எடுப்பார்கள். அம்மனுக்கு அபிஷேகம், அலங்காரம் நடைபெறும். அமர்த்தப் பட்ட தேருக்கு மாலையில் கலசம் ஏற்றப்படும். பின்பு அலங்காரம், பூமாலைகள் சாத்துப்படி நடைபெற்று, அம்மனின் தேர் உலா புறப்பாடு மிகச் சிறப்பாக நடைபெறும்.

அம்மன் தேரில் ஏறும் காட்சியும், பின்பு திருவாட்சி வடிவிலுள்ள ஓலகுண்டியம்மன் உக்கிரத்துடனும், வேகத்துடனும் வந்து தேரில் அமரும் காட்சிகள் கண்கொள்ளாக் காட்சியாக அமையும். இந்த அழகைப் பார்ப்பதற்கு மக்கள் ஏராளமாக திரண்டிருப்பார்கள்.

அன்று இரவு மூலவருக்கு காப்பு களைதல் நடைபெற்று, மறுநாள் வியாழக்கிழமை காலையில் தேரைச்சுற்றி அங்க பிரதக்ஷனம் செய்வார்கள். மாலையில் தேர் ஊர்வலமாக எடுத்துச் சென்று இறுதியில் தேர் தேரடியை அடையும். இதில் சிறப்பு என்னவென்றால் சுமார் 20 அடி உயரமும், 4 டன் எடையும் உடைய தேரை மக்கள் அனைவரும் ஒன்றுகூடி அம்மன் நாமத்தை ஜெபித்துக்கொண்டே அவர்களது தோளில் எடுத்து வருவார்கள். புதன்



இரவு சுமார் 1.5 கி.மீ. தூரமும், மறுநாள் வியாழக்கிழமை 1 கி.மீ. தூரமும் தேரை தோளில் சுமந்து ஊர்வலம் வருவார்கள். என்ன சிறப்பு பாருங்கள்! அம்மன் சாந்தமூர்த்தியாக முன் புறமும், உக்கிர மூர்த்தி வடிவில் அனைத்து அண்ட சராசரங்களையும் தன்னுள் அடக்கி வைத்து திருவாட்சி ஸ்வரூபமாக தேரில் பின்புறமும் அமருவார்கள்.

அந்த அம்மனுக்கு ஓலகுண்டியம்மன் என்றும் குண்டியம்மனின் அக்காள் என்றும் பெயருண்டு. ஓலகுண்டியம்மனுக்கு தனியாக ஆலயம் கட்டப் பட்டு ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளில் பூஜைகள் நடைபெற்று வருகிறது.

திருவிழா சமயம் நேர்த்திக்கடன் செலுத்து பவர்கள் பூ மாலைகள் அணிவிப்பர். இப்படியாக வரும் பூ மாலைகள் ஏராளம் ஏராளம். அன்னதானம், மின்விளக்கு அலங்காரம், வாண வேடிக்கை முதலியன கண்கொள்ளாக் காட்சியாக மிகவும் சிறப்பாக நடைபெறும். எந்த நிலையிலும் பக்தி நியமங்கள் குறையாத வண்ணம் திருவிழா நடைபெறும். பின்பு வெள்ளிக்கிழமை வசந்தோத்சவம் நடைபெறும். அன்று காலையில் மூலவருக்கு அபிஷேகம், அலங்காரம், திருப்பாவாடை



வர்ணிப்பு நடைபெறும். பின்பு இரவில் உற்சவ மூர்த்திக்கு அபிஷேகம், அலங்காரம் நடைபெறும்.

அதன்பிறகு உற்சவ மூர்த்தியின் காப்பு களைத்து முளைகளை ஜலத்தில் விடுதல் போன்ற வழிபாடுகள் நடத்தப்பட்டு அம்மன் வீதி உலா, பார்வேட்டு, ஊஞ்சல் சேவை முதலியன சிறப்பாக நடைபெற்று விழா இனிதாக முடிவு பெறும்.

இந்தத் திருவிழாவிற்கு பல்வேறு இடத்தில் இருந்து மக்கள் ஆயிரக்கணக்கில் வந்து அம்மனை சேவித்து அவர்களது நேர்த்திக் கடனை முடிப்பார்கள். அம்மனுக்கு பூ மாலைகள் சாத்துப்படி செய்வதையே பலரும் விரும்புகிறார்கள்.

அம்மனுக்கு காப்புக் கட்டிய நாள் முதல் நேர்த்திக் கடன் செலுத்துபவர்கள் மூலவர் சந்நிதியில் காலையிலும் மாலையிலும் 108 முறை பிரதக்ஷணம் வருவார்கள். அம்மனுக்கு சேவை செய்து, நியம நிஷ்டையுடன் அம்மனை வணங்குவார்கள். அம்மனது 'பூ' பிரசாதமே, அம்மனது உத்தரவு. நியாயமான கோரிக்கைகள் நிறைவேறும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

மேற்படி வரலாறு கிராம மக்களுக்கு பலருக்கும் தெரிந்திருக்கும். மற்றும் பலருக்கு

தெரியாமல் இருக்கும் என்பதால் நமது ஊரில் எழுந்தருளியுள்ள அம்மன் வரலாற்றையும் மகிமையையும் மற்றும் சிறப்புகளையும் அனைவருக்கும் தெரிவிக்கும் பொருட்டு எனது தந்தையாருடனும் மற்ற பெரியோர்களிடமும் சேகரித்த தகவல்களை அனைவருக்கும் அம்மன் பெருமையை தெரிவிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் இது வழங்கப்படுகிறது.

அருள்மிகு குண்டியம்மன் கவசம், அம்மனை துதிக்க வேண்டிய போற்றிப் பாடல்கள், துதிப் பாடல்கள் மற்றும் ஊஞ்சல் சேவை பாடல்கள் இத்துடன் அனைவருடைய பார்வைக்கும், வழிபாட்டிற்கும் இணைத்து தரப்பட்டுள்ளது.

ஒவ்வொரு புதன் கிழமைகளில் குளித்து, சுத்தமான ஆடைகளை அணிந்து, பூஜை அறையில் விளக்கேற்றி வைத்து குண்டியம்மனை மனதில் நினைத்து அம்மன் கவசத்தையும் போற்றிகளையும் பாராயணம் செய்தால் சகல விதமான நன்மைகளும் உண்டாவது உறுதி.

கிரகப்பிணிகள் நீங்கும். பேய் பிசாசுகள் ஒழியும். மன அமைதி ஏற்படும். பெண்கள் மகப்பேறு பெறுவர். திருவிழா நாட்களில்



அனைவரும் காலையிலும் மாலையிலும் நீராடிவிட்டு அம்மனை தியானம் செய்தால் சகல சௌபாக்கியமும் கிட்டும் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை.

*''வாழ்க குண்டியம்மன் புகழ்,*
*கிடைக்கட்டும் அவளது அருள்''*

இங்ஙனம்

**சிவசக்தி கோபிநாத்**

*கோவில் அமைந்துள்ள இடம் :*
புண்ணியம் கிராமம்
பள்ளிப்பட்டு வட்டம்
திருவள்ளூர் மாவட்டம்
தமிழ்நாடு



## அருள்மிகு குண்டியம்மனின் போற்றி பாடல்

| | | | |
|---|---|---|---|
| 1. | ஓம் | குண்டியம்மா தாயே | போற்றி |
| 2. | '' | ஓலகுண்டித் தாயே | '' |
| 3. | '' | ஸ்ரீகுண்டலினியே | '' |
| 4. | '' | குண்டலீஸ்வரியே | '' |
| 5. | '' | அம்பிகையே | '' |
| 6. | '' | அண்டங்கள் ஆள்பவளே | '' |
| 7. | '' | அகிலாண்ட நாயகியே | '' |
| 8. | '' | அன்னபூரணியே | '' |
| 9. | '' | அருள் தருபவளே | '' |
| 10. | '' | ஆதிமுதலானவளே | '' |
| 11. | '' | ஆதிபராசக்தியே | '' |
| 12. | '' | ஆறுமுகன் அன்னையே | '' |
| 13. | '' | ஆனந்த பைரவியே | '' |
| 14. | '' | ஆவணியில் காப்பு அணிபவளே | '' |
| 15. | '' | இன்னல்களை நீக்குபவளே | '' |
| 16. | '' | இச்சா சக்தியே | '' |
| 17. | '' | கிரியா சக்தியே | '' |
| 18. | '' | ஞான சக்தியே | '' |
| 19. | '' | ஈஸ்வரியே | '' |
| 20. | '' | ஈரேழு புவனங்களை ஆள்பவளே | '' |



| | | | |
|---|---|---|---|
| 21. | ஓம் | உலக நாயகியே | போற்றி |
| 22. | '' | உக்கிரமானவளே | '' |
| 23. | '' | உமா மகேஸ்வரியே | '' |
| 24. | '' | உலகத்தை காப்பவளே | '' |
| 25. | '' | ஊழ்வினைத் தீர்ப்பவளே | '' |
| 26. | '' | எங்கும் நிறைந்தவளே | '' |
| 27. | '' | எல்லைகளைக் காப்பவளே | '' |
| 28. | '' | ஏகாட்ச்சரியே | '' |
| 29. | '' | ஏகாந்த வள்ளியே | '' |
| 30. | '' | ஐங்கரன் தாயே | '' |
| 31. | '' | ஐயங்களை நீக்குவாய் | '' |
| 32. | '' | ஐஸ்வர்யங்களைத் தருவாய் | '' |
| 33. | '' | ஒப்பில்லா மணியே | '' |
| 34. | '' | ஒருநிலைத் தருவாய் | '' |
| 35. | '' | ஓம்கார நாயகியே | '' |
| 36. | '' | ஓலையில் நின்றாய் | '' |
| 37. | '' | காமாட்சியே | '' |
| 38. | '' | காத்தியாயினியே | '' |
| 39. | '' | கற்பகவள்ளியே | '' |
| 40. | '' | கால பைரவியே | '' |
| 41. | '' | கருமாரியே | '' |
| 42. | '' | நித்யகல்யாணியே | '' |
| 43. | '' | கருணை கடலே | '' |
| 44. | '' | காமகுரோதத்தை அகற்றுவாய் | '' |

45. ஓம் கோடிசூர்ய பிரகாசினியே போற்றி
46. " கிருக பிணிகளை நீக்குவாய் "
47. " சங்கரியே "
48. " சாமுண்டியே "
49. " சாம்பவியே "
50. " சிவசக்தியே "
51. " சிம்மவாகினியே "
52. " சாந்த சொரூபிணியே "
53. " சந்திரபிறையை அணிந்தாய் "
54. " சங்கடங்களை நீக்குவாய் "
55. " திவ்ய ஸ்வரூபிணியே "
56. " ஜாஹ்ணவியே "
57. " ஜகதாம்பிகையே "
58. " ஜகத்ரட்சகியே "
59. " பிரம்ம ஸ்வரூபிணியே "
60. " நாராயணியே "
61. " ரௌதிரியே "
62. " மஹிஷாசூர மர்தினியே "
63. " மஞ்சுபாஷினியே "
64. " மகா காளியே "
65. " மகா மாயியே "
66. " கௌரி மாதங்கியே "
67. " மீனாட்சியே "
68. " மீனலோசனியே "



69. ஓம் ஞான ரூபினியே போற்றி
70. " ஞானத்தை தருவாய் "
71. " பூதநாதனின் நாயகியே "
72. " பண்டாசூரனை அழித்தாய் "
73. " பூதபிசாசுகளை அகற்றுவாய் "
74. " பக்தர்களை காத்திடுவாய் "
75. " நிற்குணமானவளே "
76. " நிராமையயே "
77. " நிரந்தரமானவளே "
78. " நிர்மலமானவளே "
79. " துர்கையே "
80. " துஷ்டர்களை அழித்தாய் "
81. " வராகியே "
82. " வரசித்தித் தாயே "
83. " விஷ்ணு ஸ்வரூபிணியே "
84. " வைஷ்ணவியே "
85. " விஸ்வத்தை ஆள்பவளே "
86. " ஸ்ரீ சக்கரத்தில் அமர்ந்தாய் "
87. " லலிதாம்பிகையே "
88. " திரிபுர சுந்தரியே "
89. " திரிசூலம் தரித்தாய் "
90. " திருக்காப்பு அணிபவளே "
91. " திருக்கோலம் வருபவளே "
92. " திருவாட்சியாய் அருள்பவளே "



93. ஓம் திருப்பாவாடை ஏற்பவளே போற்றி
94. " திருவருள் 'பூ'வாக தருபவளே "
95. " பார்வேட்டு நடத்துபவளே "
96. " பாவத்தை நீக்குவாய் "
97. " பூதரதத்தில் வருபவளே "
98. " சர்வமங்களம் தருவாய் "
99. " மகப்பேறு அருள்பவளே "
100. " மாந்தரைக் காப்பவளே "
101. " சௌபாக்கியம் தருபவளே "
102. " புண்ணியத்தில் அமர்ந்தாய் "
103. " அமைதியைத் தருவாய் "
104. " ஜகத்காரணியே "
105. " அருள்வடிவானவளே "
106. " மாங்கல்யம் காப்பாய் "
107. " எப்போதும் உன் அடிமையே "
108. ஓம் என்றும் எங்களை இரட்சிப்பாய்
போற்றி! போற்றி! போற்றி!

*- சிவசக்தி கோபிநாத்*

❖ ❖ ❖



## அருள்மிகு குண்டியம்மனின் கவசம்

ஓம் என்ற ஏகாட்சரம் ப்ரஹம் எனப்படுவதால் அந்த ப்ரஹம் சக்தி வடிவாய் குண்டியம்மன் என்ற நாமத்தோடு குசஸ்தலை ஆற்றின் தென் கரையில் புண்ணிய பூமியில் லிங்க வடிவத்தில் அமர்ந்து அருள்பாலிக்கின்றாள்.

அண்ட சராசரங்களும் அவளுள் அடக்கம்!
ஈரேழு புவனங்களும் அவளது ஆட்சியே!
தேவர்களும் மூவர்களும் அவளது
ஆணைக்குட்பட்டு நடப்பவர்களே!
ஆதி அந்தமில்லா பரமனுக்கே சக்தி அளிக்க இட
பாகத்தில் அமர்ந்தவளாயிற்றே!
அகார, உகார, மகார, ஓம்கார, ரீங்காரங்கள்
உடையவளே!
தேவர்களைக் காத்திட அசுரர்களை சம்ஹாரம்
செய்தவளே!
சண்டி, சாமுண்டி, திரிசூலி, ஆதிபராசக்தி,
மாதங்கி, மகாகாளி, பைரவி, பரமேஸ்வரி,
திரிபுரசுந்தரி, கருமாரி என்ற எண்ணிலடங்கா
நாமங்கள் உடையவளே!
எப்படி கூப்பிட்டாலும் குரல் கொடுப்பாளே!
தாய் வரும்போது தேவர்கள் துதிப்பார்களே!

வேதியர் நான்மறைகள் ஓதுவார்களே!
தனதன தனதன தனதன தனதன எனத் தாள
வாத்தியம் முழங்குமே!
தாரைத் தப்பட்டை மணி ஓசை ஒளிருமே!
தூபதீப நெய்வேத்தியங்கள் நடந்தேறுமே!
பக்தர்கள் ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்சக்தி என்று
துதிப்பார்களே!
அவளது நாமத்தை உச்சரித்தால் கடும்பகை
நீங்குமே!
பூதபேய் பிசாசுகள் ஓடிவிடுமே!
கிருக பிணிகள் நீங்கிவிடுமே!
துஷ்ட பிராணிகள் அருகிலே அண்டாதே!
இப்படியாக உள்ள குண்டியம்மன் புகழ்பாட
இப்பிறவி போதுமோ!
அவளது புகழ் வாழ்க வாழ்க வாழ்க!
நம்மைக் காக்க வருவாள் வருவாள் வருவாள்!
நிச்சயம் அருள் தருவாள் தருவாள் தருவாள்!
தினமும் துதிப்போம் அவளை நாடி
அவளது அருளை பெறுவோம் பெறுவோம்!
ஆவணி மாதத்தில் அவளது திருக்கோலம்
கண்கொள்ளாக் காட்சியே!

காப்பு அணிவித்த நாள் முதல் வசந்த உற்சவம் வரையில் தினந்தோறும் காலையில் மாலையில் அங்கந் துலக்கி, பூஜை அறையில் விளக்கேற்றி



வைத்து, அருள்மிகு குண்டியம்மனை மனதில் நிறுத்தி, இக்கவசத்தின் பொருளை உணர்ந்து துதிப்போர்க்கு வாழ்க்கை சீர் அடையும், நல்வாழ்வு அமையும். கன்னியர்க்கு மணவாழ்வு அமையும். மகப்பேறு கிட்டும். கிரக தோஷங்கள் அகலும். பகைமை ஒழியும். எல்லா நன்மையும் உண்டாகும் என்பது திண்ணம்.

இதனை உணர்ந்து அனைவரும் இக்கவசத்தை நாள்தோறும் துதிப்பார்களாக!

*வாழ்க வாழ்க குண்டியம்மன் புகழ்!*
*வாழ்க வாழ்க அம்மன் அடியார்கள்!*
*பெறுக பெறுக அவளது அருள்!*
*ஓம் சக்தி! ஓம் சக்தி! ஓம் சக்தி!*

*- சிவசக்தி கோபிநாத்*

❖ ❖ ❖



## அருள்மிகு குண்டியம்மன் துதிப் பாடல்

குறிப்பு : இந்தப் பாடலை ஸ்ரீஸ்ரீனிவாசம், ஸ்ரீவெங்கடேசம் என்ற மெட்டில் பாட வேண்டும்.

மெட்டு : தந்தானத்தானே தான தந்தானே

சாமுண்டித் தாயே குண்டியம்மத் தாயே!
*(இந்த வரியை அடுத்து வரும் ஒவ்வொரு வரிக்குப் பிறகும் சேர்த்துப் பாட வேண்டும்)*

உந்தன் மகிமையை பாட வந்தோமே!
குடத்தலை ஆற்றங்கரையில் அமர்ந்தாயே!
உக்கிர ஸ்வரூபிணி சாந்த ஸ்வரூபிணி!
வாரந்தோறும் புதன் அன்று பூஜை!
எந்நாளும் தினப்பூஜை நடத்திடுவோமே!
பம்பை, உடுக்கை, சிலம்போசை கேட்கும்!
கோவில் மணி ஓசை கேட்டாலே போதும்!
பூஜாரி வர்ணிப்பு தவறாது நடந்திடுமே!
பேய் பிசாசுகள் அண்டாமல் ஓடும்!
ஆவணி மாதத்தில் திருக்கோலம் காண்பாய்!
புதன் அன்று அபிஷேக ஆராதனையோடு!
திருக்காப்பு அணிவித்து பறைச்சாட்டிடுவோமே!
பதினைந்து நாட்கள் விரதம் இருப்போமே!



காலையிலும் மாலையிலும் அபிஷேகம் தவறாது!
அலறிப் பூக்களால் அர்ச்சனை செய்வோமே!
வரும் புதன் அன்று ஊர்வலம் வருவாயே!
நாள்தோறும் திருக்கோலமாய் வருவாயே!
பால், பஞ்சாமிருதம், பன்னீர் அபிஷேகம்!
மாலைகள் சூடி பவணி வருவாயே!
ஆவணி மாதம் கடைசி புதனன்று!
உந்தன் தேருக்கு கலசம் ஏற்றிடுவோமே!
உக்கிரஸ்வரூபிணி திருவாட்சியாக!
எழுந்தருள்வாயே எழுந்தருள்வாயே!
தேர் திருவிழாக்கோலம் கண்கொள்ளாக் காட்சி!
பூமாலைகள் ஏராளம் ஏராளம்!
தேரின் அலங்காரம் சொல்லி மாளாதே!
அம்மன் தேரை தோளில் எடுப்போமே!
கட்டியக் காப்பினை களைந்திடுவோமே!
வியாழன் அன்று அங்கபிரதக்ஷனம்
செய்திடுவோமே! செய்திடுவோமே!
ஊரெங்கும் கொண்டாட்டம் மாவிலைத் தோரணம்!
வாண வேடிக்கை பக்தர்கள் கோஷம்!
சொல்லி மாளாது அம்மனின் பெருமை!
வெள்ளிக் கிழமையன்று வசந்தோட்சவம்!
அபிஷேக ஆராதனை திருப்பாவாடையோடு!
இரவில் பார்வேட்டு நடத்திடுவோமே!

அம்மன் ஊஞ்சல் சேவை கண்கொள்ளாக் காட்சி!
அவள் அருள் நாடி பக்தர்கள் கூட்டம்!
சொல்லி மாளாது சொல்லி மாளாது!
எல்லோரையும் இரட்சித்து அருள் தருவாயே!
வாழ்க உன்புகழ் என்றென்றும் வாழ்க!
காக்க உன் பக்தர்களை என்றென்றும் காக்க!
சாமுண்டித்தாயே குண்டியம்மத்தாயே!
சாமுண்டித்தாயே ஓலகுண்டித்தாயே!

❖ ❖ ❖

## அருள்மிகு குண்டியம்மனின் புகழ் பாடல்

எத்தனைப் பிறவி வேண்டுமோ அறியேன் தாயே!
எத்தனைப் பிறவி வேண்டுமோ அடியேனுக்கு
உன்புகழ்ப்பாட, திருவடிக்காண எத்தனைப் பிறவி
வேண்டுமோ !
அத்துணைப் பிறவியிலும் உன்புகழ்ப்பாட
வேண்டும்
(எத்தனை...)

ஓலையில் ஓங்காரமாய் தோன்றி ரீங்காரமாய் வந்து
அலங்காரமாய் அமர்ந்த அம்பிகையே!
குண்டலினியே! உன்புகழ்ப்பாட (எத்தனை...)



அஷ்டாச்சரத்தில் நீ ஆதாரமாய் ஆனாய்!
ஷாடச்சரத்தில் நீ ஜீவனாய் நின்றாய்!
பஞ்சாட்சரத்தில் நீ ப்ராணனாய் தோன்றி
புண்ணிய நகரத்தில் ஏகாட்சரியாய் அமர்ந்தாய்!
(எத்தனை...)

குண்டியம்மன் என்ற திருநாமம் பெற்றாய்!
அரைத்திங்கள் காப்பணிந்து நிஷ்டையில் நின்றாய்!
திருவிழாக் கோலம்கொண்டு வீதிஉலா வந்தாய்!
மக்களை காத்திட சாமுண்டியாய் அமர்ந்தாய்!
(வசந்தம் கண்டிட ஊஞ்சலில் அமர்ந்தாய்!)
(எத்தனை...)

உன்னை துதிப்போர்க்கு அருள்செய்திடல் வேண்டும்!
மங்களமாய் மாதரைக் காத்திடல் வேண்டும்!
எங்கும் சாந்தி நிலவச் செய்திடல் வேண்டும்!
புண்ணிய நகரத்தினை காத்திடல் வேண்டும்!
(எத்தனை...)

ஓம் சக்தி! மஹாசக்தி!

❖ ❖ ❖



## அருள்மிகு குண்டியம்மனின் ஊஞ்சல் சேவை பாடல்

ஆனந்தத் தாண்டவம் ஆடிய நின்பாதம்
அருளாசை வழங்கிட அமர்ந்தத் திருக்கோலம் - வாழ்க
(ஆனந்தத் தாண்டவம்...)

ஸ்ரீ குண்டலீஸ்வரி சாமுண்டி பைரவி
அகிலாண்டநாயகி அன்னபூர்ணேஸ்வரி - வாழ்க
(ஆனந்தத் தாண்டவம்...)

சிம்மவாஹினி மஹிஷாசுரமர்த்தினி
திரிசூலினி திருபுரசுந்தரினீ - வாழ்க
(ஆனந்தத் தாண்டவம்...)

நான்மறை வேதங்கள் வேதியர் ஓத
வானவர் வணங்கிட வாத்தியங்கள் முழங்கிட - வாழ்க
(ஆனந்தத் தாண்டவம்...)

வாழ்க திருவிழாக்கோலம் வாழ்க ஊஞ்சல் சேவை
வாழ்க நின்அடியார்கள் வாழையடி வாழ்க - வாழ்க
(ஆனந்தத் தாண்டவம்...)

❖ ❖ ❖